செய்திப் பணிப்பாளர் /செய்திப் பதிப்பாசிரியர் 21.07.2017

# செய்தி வெளியீடு

## "பணவீக்கம் யூன் மாதத்தில் 6.3% க்கு குறைவடைந்துள்ளது"

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) : யூன் 2017

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2017 யூன் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2017 மே மாதத்தில் 7.1% இருந்து 2017 யூன் மாதத்தில் 6.3% ஆக குறைவடைந்துள்ளது என தெரிவித்தார். 2017 யூன் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 3.9%, 2.4% ஆக இருந்த அதேவேளை, 2016 யூன் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 3.4%, 3.1% ஆக காணப்பட்டன.

இருப்பினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2017 மே மாதத்தில் பதிவாகிய 121.8 இருந்து 2017 யூன் மாதத்தில் 123.4 ஆக அதிகரித்துள்ளது. இது, முந்திய மாதமான 2017 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 யூன் மாதத்தில் 1.6 சுட்டெண் புள்ளிகள் அல்லது 1.3 சதவீத புள்ளிகள் அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மாதம் மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 1.30%ஆல் மற்றும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.03%ஆல் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு காரணம் அரிசி, மரக்கறி, புதிய மீன், கருவாடு, கோழி இறைச்சி, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், தேயிலை, எலுமிச்சம்பழம் மற்றும் வெள்ளைப்பூடு ஆகியவற்றின் விலைகள் அதிகரித்தமையேயாகும். எனினும், சுட்டெண்ணில் குறைந்த செலவுப் பெறுமதிகள் தேங்காய், தேங்காய் எண்ணெய், முட்டை, பெரிய வெங்காயம், வாழைப்பழம், பப்பாசிப்பழம் மற்றும் புளி என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 யூன் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு', 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்', 'அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்' அத்துடன் 'ஆடையும் காலணியும்' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். இருப்பினும், முந்திய மாதமான 2017 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 'சுகாதாரம்' உணவல்லாப்பொருள் பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் வீழ்ச்சி பதிவாகியது. 'வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்', 'போக்குவரத்து', 'தொடர்பாடல்', 'பொழுதுபோக்கும் கலாசாரமும்', 'கல்வி' மற்றும் 'உணவகமும் ஹோட்டல்களும்' ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

## தே.நு.வி.க இன் அசைவுகளும் (அடிப்படை 2013=100) வருடத்தின் மீது வருடம் பணவீக்கம்




**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| மாதம் | வருடம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின் மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2016** | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | ஒக்ரோபர் | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| **2017** | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | யூன் | 123.4 | 1.3 | 6.3 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்